(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | | |
|---|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | } | STC.No.201/2022 |

எதிரி தரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் DW-4

| | | |
|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் |
| த/பெ | : | ராஜேந்திரன் |
| கிராமம் | : | ஈரோடு |
| வட்டம் | : | ஈரோடு |
| வயது | : | 42 |

( எதிரி ஆஜர் இல்லை கு.வி மு.ச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)-ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை :-**

1) ஸ்ரீசெந்தில் ஸ்டீல்ஸ் கம்பெனி என்பது என் தகப்பனாருக்கு உரிமையான நிறுவனமாகும். அந்த நிறுவனத்தில் 2017ம் வருடம் முதல் நான் காசாளராக பணி செய்து வருகிறேன். 1-7-2017ம் தேதியிட்ட நான் என்னை காசாளராக நியமித்த உத்தரவின் அசல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது. எங்கள் நிறுவனத்திற்கும் புகார்தாரர் நிறுவனத்திற்கும் வணிக ரீதியாக தொடர்பும் எதுவும் கிடையாது. நான் வேலை பார்க்கும் நிறுவனத்திற்கும் சென்னை ஸ்ரீ விநாயகா டிரேடர்ஸ் நிறுவனத்திற்கும் வணிக தொடர்பும் உள்ளது என்றால் சரிதான். வழக்கு காசோலை எண். 043866, 043867 காசோலைகளை ஈரோட்டில் வைத்து 08-10-

2021ம் தேதி அன்று ஸ்ரீ விநாயகா டிரேடர்சை சேர்ந்த கார்த்தீசன் என்பவருக்கு Crossed cheque –க்காக மேற்கண்ட காசோலைகள் கொடுக்கப்பட்டது.

2) காசோலை எண். 043801 முதல் 043900 வரையிலான காசோலை புத்தகத்தின் Records slip அசல் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கார்த்தீசன் என்பவர் காசோலையை என்ன செய்தார் என்று எனக்கு தெரியாது. மேற்படி காசோலை மூலம் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரருக்கும், எங்களுக்கும் இடையே பண பரிமாற்றம் எதுவும் கிடையாது. காசோலைக்கும் புகார்தாரருக்கும் எந்த விதமான தொடர்பும் கிடையாது. பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** : – எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுகிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்.)திரு.மு.ஆனந்த்,பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் (ம)
குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
இராதாபுரம்.